விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 03 வெள்ளிக்கிழமை (19.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335

## ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கான உரிமையை எவரும் தடுக்கவே முடியாது

### சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

"எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகின்றது.

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது."

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15

## யாழில் நாவலர் சிலை திறப்பு



03

# யாழில் மீண்டும் கோவிட் அபாயம்!

## அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை அதிகரித்துச் செல்கிறது எனத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பயணங்கள், இதர செயற்பாடுகளின்போது ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா

மரணம் – 15
தொற்று – 737

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 15 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் 15

## வவுனியாவில் உயிரிழந்த முதியவருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த நிலையில் வவுனியா 15

## கொரோனாவால் பருத்தித்துறையில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனு 15

## வவுனியாவிலிருந்து கொழும்பு சென்ற வாகனம் விபத்து

- இளைஞன் உயிரிழப்பு
- 5 பேர் படுகாயம்

(வவுனியா)

பதிவு · திருமணத்திற்காக வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ஹயஸ் வாகனம் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா-கொழும்பு வீதியில் உள்ள கல் 15

## கார்த்திகை தீபத்தால் குழப்பமடைந்த இராணுவத்தினர்


### தீபம் ஏற்றியவர்களிடம் விசாரணை


(முல்லைத்தீவு)

தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படும் கார்த்திகை தீபத் திருநாளான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மக்கள் இந்த திருநாளை தீபம் ஏற்றிக் கொண்டாடியவேளை, மாவட்டத்தின் சில இடங்களில் இராணுவத்தினர் கார்த்திகை தீபத் திருநாளை குழப்பும் வகையில் செயற்பட்டுள்ளதாக 15

## தமிழர் தாயகப் பகுதிகளில் ஒளிவீசிய கார்த்திகை தீபம்







15

## மாவீரர்களின் வீடுகளுக்கு சென்று விபரங்களை திரட்டும் இராணுவத்தினர்

### பெரும் அச்சத்தில் மக்கள்

(கிளிநொச்சி)

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் வீரகாவியமாகிய மாவீரர்களை நினைவு கூரும் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் கிளிநொச்சியில் மாவீரர்களின் வீடுகளுக்குச் சென்று விபரங்களை திரட்டி அச்சுறுத்தும் முயற்சி 15

## குடும்பஸ்தர் மீது சுன்னாகத்தில் வாள்வெட்டு!

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுன்னாகம் - அம்பனை பகுதி 15

## தொடர் வாந்தியால் இளைஞன் மரணம்

### மாதகலில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வயிற்றுக்குத்து மற்றும் வாந்தி காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாதகல், துறைமுக வீதியைச் சேர்ந்த 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உணவுப் பொதியின் விலையை மேலும் அதிகரிக்க நேரிடும்

### சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உணவுப் பொதி உள்ளிட்ட அனைத்து சிற்றுண்டி பொருட்களின் விலைகளையும் அதிகரிக்க நேரிடும் என அனைத்து சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் அமைப்பின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது உணவுப்பொதி ஒன்றின் விலை 10 தொடக்கம் 20 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும் எதிர்காலத்தில் அதனை மேலும் அதிகரிக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்படி இல்லாவிட்டால் மரவள்ளிக்கிழங்கு, பூசணி போன்றவற்றை வைத்து மாத்திரமே உணவுப் பொதி பார்சல் வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது போஞ்சி, கரட், உருளைக்கிழங்கு, தக்காளி போன்றவற்றின் விலைகள் 500 ரூபாய்க்கு அதிகமாக உள்ளன. வரலாற்றில் இதுவே முதல் தடவையாக மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞூ)

## அமைச்சுக்கள், அரச நிறுவன சட்ட கட்டமைப்பில் மாற்றம்

### அதிசிறப்பு வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் தொடர்பான நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பை திருத்தும் அதிசிறப்பு அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றின் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்புகள் திருத்தப்பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு மற்றும் வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பானது நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (ஞூ)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற நால்வர்

### மாங்குளத்தில் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் நான்கு பேரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்று கைதுசெய்துள்ளார்கள்.

மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரங்களை சோதனை செய்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அவர்களிடம் அனுமதிப்பத்திரம் இல்லாத நிலையில் குறித்த நால்வரையும் நான்கு உழவியந்திரங்களுடன் கைது செய்து மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இவர்கள் நால்வரும் கிளிநொச்சி பகுதியினை சேர்ந்தவர்களென தெரியவந்துள்ளதுடன் இவர்கள் மீதான சட்டநடவடிக்கையினை மேற்கொள்ளும் நடவடிக்கையில் மாங்குளம் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

எனினும் சட்டமுரணனவகையில் மணலேற்றும் செயலானது நாட்டில் அதிகரித்தவண்ணமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஞூ)

## தடைசெய்யப்பட்ட களைநாசினிகளுடன் இரண்டு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட, தடை செய்யப்பட்ட களைநாசினிகளுடன் யாழ். சுன்னாகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமானப்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 1,251 பக்கெட்களில் பொதியிடப்பட்ட களைநாசினிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - வங்காலை மற்றும் யாழ். சங்கானை ஆகிய பகுதிகளை சேர்ந்த 48 மற்றும் 60 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞூ)

## முல்லைத்தீவில் இளைஞன் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தீர்த்தக்கரைப் பகுதியில் 06 வயதுச் சிறுமி ஒருவரை இழுத்துச்சென்ற இளைஞர் ஒருவர் பொதுமக்களால் பிடித்து நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது தீர்த்தக்கரையில் தனியாக நின்றிருந்த சிறுமி ஒருவரை 17 வயதுடைய சிறுவன் ஒருவர் பாழடைந்த வீடு ஒன்றுக்குள் இழுத்துச் சென்றதுடன் சிறுமியின் வாய், கை என்பவற்றையும் கட்டுவதற்கு முயற்சித்திருக்கின்றார்.

துணிந்து செயற்பட்ட குறித்த சிறுமி அங்கிருந்து அபயக்குரல் எழுப்பியதுடன் வெளியே ஓடிவந்துள்ளார்.

சம்பவத்தை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் அங்கு சென்று சிறுவனைப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர். (ஞூ)

### கடந்த இரண்டு நாட்களில்

## அதிகூடிய மழைவீழ்ச்சி தெல்லிப்பழையில் பதிவு

(குப்பிழான்)

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 08.30 மணி முதல் நேற்று வியாழக்கிழமை காலை 08.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழையில் மீண்டும் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 107.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

குறித்த காலப் பகுதியில் திருநெல்வேலியில் 104.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் 74.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப்பகுதியில் 74.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 50.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 44.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், ஆனையிறவில் 68.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த மாத இறுதியில்(ஐப்பசி மாதம்) யாழ். மாவட்டத்திலேயே தெல்லிப்பழையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 152.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞூ - 18)

## 68 ஆடுகளை ஏற்றிச்சென்ற இருவர் நாவற்குழியில் கைது

யாழ்.தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/294 நாவற்குழி பகுதியில் அனுமதிப்பத்திர விதிகளை மீறி 68 ஆடுகளை ஏற்றிச் சென்ற வாகனம் யாழ்.பொலிஸ்விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ். ஐந்துசந்தி பகுதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ள நிலையில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞூ)


# பதவி வெற்றிடம்

**சிவனருள் உற்பத்திகள்- Sivanarul Products**

**பொது முகாமையாளர்**

சிவனருள் உற்பத்திச்சாலை சிவனருள் சமூகத் தொண்டு நிறுவனத்தின் வணிகப் பிரிவாகும். இது வடமாகாணத்தில் பல உற்பத்தி மையங்களை நடாத்தி வருகின்றது.

இந்தப் பிரிவின் வளர்ச்சியின் இதற்கு ஒரு பொது முகாமையாளரை நியமிக்கத் தீர்மானித்துத் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம்.

**தகைமைகள்:**

- குறைந்தது 10 வருடங்களாவது வணிக நிறுவனங்களை வெற்றிகரமாக நடாத்திய அனுபவம்.
- புதிய சிந்தனைகளுடனும் ஊக்கத்துடனும் செயலாற்றக்கூடிய திறமை.
- நிறுவனத்தின் ஊழியர்களைத் தக்கவகையில் வழிநடாத்தி அவர்களின் செயலாற்றத் திறனை அதிகரிக்கும் திறமை.
- பட்டப்படிப்பு விரும்பத்தக்கது. ஆனால் அவசியமல்ல.
- சமூகத் தொண்டு மனப்பான்மை.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்கள் கல்வித் தகைமைகள், வகித்த பதவிகள், அதிலே பெற்ற அனுபவங்கள், செய்த சாதனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய தற்குறிப்பைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(C-3048)

svtpc2012@gmail.com



# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் பழைய மாணவரும் உப அதிபரும் சமாதான நீதவானுமாகிய

அமரர்

**ஐயாத்துரை குணசீலன்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 15.03.1969

மறைவு 17.11.2021

(C-3046)

பிரிவின் துயரில் கல்லூரிச் சமூகம்

யா / மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி





யாழ்ப்பாணம் - நாவலர் கலாசார மண்டபத்தின் நுழை வாயிலில் நிறுவப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை நேற்று திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாநகர சபையின் உறுதுணையுடன் சைவ மகா சபையால் குறித்த சிலை நிறுவப்பட்டது. யாழ். மாநகர சபையின் பிரதி மாநகர ஆணையாளர் பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா.நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: சிவசாந்தன், ரவிசாந்)

# ஈழத்தமிழருக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும்

## வலுவான ஆதாரத்தை சமர்ப்பித்தது தமிழர் உரிமைக்கான குழு

(ஒட்டாவா)

**இலங்கையில் தமிழ் மக்களை இலக்குவைத்து மனிதாபிமான மற்ற மிகமோசமான குற்றங்களும் போர்க்குற்றங்களும் இழைக்கப்பட்டன என்பதற்குப் பெருமளவான சான்றுகள் உள்ளதாக அறிக்கையொன்றை கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் தமிழர் உரிமைக்கான குழுமத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

ஈழத்தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நீதி நிலை நாட்டப்படுவதை வலியுறுத்தியும் ரோமசாசனத்தின் 15 ஆவது பிரிவின்கீழ் பூர்வாங்க ஆய்வொன்றினை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தும் தகவல் அறிக்கையொன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்குரைஞர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மியன்மார் மற்றும் பங்களாதேஷ் ஆகிய வழக்குகளை முன்மாதிரியாகக் கொண்டு, இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான அதிகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டும் என்று கடந்த வருடம் சர்வதேச தமிழ் அகதிகள் உதவி வலையமைப்புடன் இணைந்து எமது குழுமம் வலியுறுத்தியிருந்தது.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான முயற்சி ஐக்கிய நாடுகள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்துவிட்டன.

இருப்பினும் அப்போதிருந்து இலங்கையில் சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி மிகவும் கரிசனைக்குரிய வேகத்தில் குறைந்து வருகின்றது. குறிப்பாக கடந்த 2015 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் தானாக முன்வந்து இணை அனுசரணை வழங்கிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து தற்போதைய அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக விலகியதுடன் மாத்திரமன்றி, எந்தவொரு உள்நாட்டு மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளில் இருந்தும் ஆயுதப்படைகளைப் பாதுகாப்பேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாகவே சூளுரைத்திருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகளாவிய அதிகார வரம்பு என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக நிலைமாறுகால நீதியை இடைவிடாமல் கோருவதைத் தவிர வேறு தெரிவுகள் எமக்கு இல்லை என அந்த அறிக்கயில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## அமெரிக்க இராஜாங்க திணைக்கள குழுவுடன் கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு சந்திப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர்கள் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான பிரிவினரை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் உலக தமிழ்ப் பேரவையின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில், இந்தச் சந்திப்பு குறித்து டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான பிரிவு, இச்சந்திப்பின்போது அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் நல்லிணக்கம் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்துள்ளது. (நி)

## மக்களின் பிரச்சினைக்கு தீர்வில்லை-கரு ஜயசூரிய

(கொழும்பு)

அரசாங்கம் தேவையான அதிகாரத்தைப் பெற்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவில்லை என நீதி சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரி வித்தார்.



இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளதாகவும், இதனால் மக்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி-5)

# தேசிய கிரிக்கெட் அணி குழாமில்

## மகாஜன, ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவிகள்

இலங்கை 21 வயது மகளிர் கிரிக்கெட் தேசிய அணியின் 20 வீராங்கனைகளைக் கொண்ட குழாமில் மகாஜனக் கல்லூரியின் முன்னாள் மாணவியும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் கற்கைநெறியின் முதலாம் வருட மாணவியுமான சானு பாஸ்கரன் இடம்பெற்றுள்ளார்.



இவருடன் யா/ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் பழைய மாணவி மதுரிகா முரளிதாசனும் தெரிவாகியுள்ளார்.

சானு பாஸ்கரன் கடந்த வருடம் இலங்கை மகளிர் உதைபந்தாட்ட தேசிய அணியிலும் தெரிவாகி தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ண போட்டியிலும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-105)

# பெண்களுக்கான கரம் தொடர்

## யாழ்.மாவட்ட அணி மூன்றாமிடம்



33ஆவது தேசிய மட்ட இளைஞர் மாவட்ட அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான கரம் தொடரில் யாழ் மாவட்ட இளைஞர் பெண்கள் அணி 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். 33ஆவது தேசிய மட்ட இளைஞர் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக்கான கரம் தொடர் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது. 3ஆம் இடத்திற்கான பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்ட இளைஞர் அணியை பிரதி நிதித்துவம் செய்த ஈ.டிசாந்தியை எதிர்த்து கேகாலை மாவட்ட வீராங்கனை மோதினார்.

இதில் யாழ் மாவட்ட இளைஞர் அணி வீராங்கனை 25:0, 25:0 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3ஆம் இடத்தை பெற்றனர். (4-6-90)

# நியூஸிலாந்திற்கு எதிரான தொடர்; இந்தியா முன்னிலை

நியூஸிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியக் கிரிக்கெட் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

ஜெய்பூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியக் கிரிக்கெட் அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில்



6 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இந்தியக் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (4-6)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2452

### பவானி

அண்ணே.. இப்ப தான் கல்யாணம் ஆகியிருக்கு.. இல்லறம் சிறக்க ஏதாவது டிப்ஸ் குடுங்கண்ணே..



ஒரு டம்ளர் அரிசிக்கு இரண்டு டம்ளருங்கற அளவுல தண்ணீர் ஊத்துடா. அப்புறம் மூன்று விசில் வந்ததும் ஸ்டேவ்வ ஆஃப் பண்ணிடு.. அவ்வளவு தான்.
Wish Your Happy Marrage Life..!!

### விஜய்



ஓரே குளுருதே னு இந்த மூதேவிய off பண்ணா



இந்த பண்ணாட வந்து கடிக்குது

### உமையாளி

வெயில் காலத்துல உன்னைய திட்டு னோம்னு கோவிச்சுக்கிட்டியா தெய்வமே.. எதையும் மனசுல வச்சிக்காம ஒரு இரண்டு நாள் வந்துட்டு போ என் கடவுளே



துவைச்சு வைச்ச துணிய மட்டும் காய வச்சுக்கிறேன்... அப்புறம் நீ என்ன சொன்னாலும் நா கேக்குறேன்

### சிந்து



சம்பள கவர தொறக்கவே மாட்டேனே அத முழுசா தருவேனே





அந்த நாய் வீட்டுக்கு வரட்டும்.. கொய்யால..

### கோசிகா

நாம இருக்கிற இடத்துக்கு ஏழரை தேடி வருதா..



இல்ல அது இருக்கிற இடத்துக்கு நான் போறேன்னா தெரியல..

### வன்

ஜப்பான் 7ஜி டெக்னாலஜியில போய்க்கிட்டிருக்கு.. ஆனால் நம்ம ஊரிலே 4ஜி காட்டுது...



தெருவுல H+ காட்டுது.. வீட்டுக்குள்ள E காட்டுது.. டைனிங் ரூம்ல எமர்ஜென்ஸி கால் என்று காட்டுது.. படுக்கையறைக்குள்ள போயிட்டா instert sim என்று காட்டுது..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

19.11.2021
கார்த்திகை 03, வெள்ளிக்கிழமை
பூரணை பிற்பகல் 2.39 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 4.59 மணிவரை
சுபநேரம் 6.09-7.39 மணிவரை
இராகு காலம் 10.39-12.09 மணிவரை
சந்திராஷ்டமம்- சுவாதி
திருக்கார்த்திகை விரதம்

வளவன்


மேஷம்

காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.


மிதுனம்

எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.


கடகம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும், வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


சிம்மம்

சந்தோசம் தரும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

மறைமுக எதிர்ப்புகள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


துலாம்

மறதியால் சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.


விருச்சிகம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டில் நம்பிக்கை கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


தனுசு

புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உடல் நலன் சீராகும்.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளை கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்


வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


மீனம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பகை விலகி பாசம் கூடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

உன் அறிவு அழுகுற அதைக் கூர்மைப்படுத்திக் கொள்.

# டெங்கு தீவிரம்!



(கொழும்பு)

டெங்கு காய்ச்சலினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் மழையுடனான கால நிலையால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும் என வைத்தியசாலையின் பணிப்பாளர், மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

சாதாரணமாக நாளொன்றில் 5 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வந்த நிலையில், தற்போது ஒரு நாளில் 25 இற்கும் அதிகமானவர்கள் அனுமதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, டெங்கு நோய்ப் பரவல் தொடர்பில் பெற்றோரை அதிக கவனம் செலுத்துமாறு அவர் வலியுறுத்தினார். (நி-5)

# அரசாங்கம் கவிழும் நாள் தூரத்தில் இல்லை-ராஜித

(கொழும்பு)

**ஒருநாள் காலை நித்திரை விட்டு எழும்போது அரசாங்கம் கவிழ்ந்ததாக விசேட செய்தி வரும் என பார்ராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன எச்சரித்தார்.**

பண்டாரகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தில் உள்ள பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் விரைவில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி புதிய அரசாங்கம் உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிலர் உடனடியாக தம்முடன் இணைய விரும்பியபோதும் அதற்கு இன்னும் சிறிது காலம் கடக்க வேண்டியுள்ளதாகவும் எந்த சக்தியுடனும் இணைந்து இந்த அரசாங்கத்தை விரைவில் கவிழ்ப்போம் என அவர் தெரிவித்தார். (நி)

# பரீட்சைகள் திணைக்களத்தின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சைகள்

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான எழுத்து மூல பரீட்சையை பரீட்சைகள் திணைக்களத்தின் கண்காணிப்பில் கீழ் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் முதல் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றியதன் பின்னர் அதிகமானோர் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக கோரிக்கை விடுப்பதை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தாம் வசிக்கும் இடத்திலேயே சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான எழுத்துமூல பரீட்சையில் தோற்றும் சந்தர்ப்பம் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை

(கொழும்பு)

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை என தெரிவிக்கும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன எரிபொருள் தொடர்பில் கட்டுக்கதைகளை பரப்புவோரை பொலிஸார் கைது செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை. நாட்டுக்கு தேவையான எரிபொருளைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டு வருகிறோம் எனவும் தெரிவித்தார். (நி-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

(எமது சங்கப் பணியாளர் திரு.சி.கிருஷ்ணவேலு அவர்களின் அன்புத் தந்தையார்)

அமரர். **சின்னையா சிவலிங்கம்**

பிறப்பு 17 04 1939



இறப்பு 20 10 2021

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
புலோலி.ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை.

(c-3044)



பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயச் சூழலில் சிவபூமி அறக்கட்டளையினரால் புதிதாக நிறுவப்பட்டுள்ள கீரிமலை சிவபூமி ஆச்சிரமத்தின் திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் கலந்து கொண்டு ஆச்சிரமத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். மேற்படி விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரி எஸ். கிருஷ்ணமூர்த்தி, இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர், மாவை சேனாதிராசா, வலி. வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்: ரவிசாந்)

# புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் 1,166 வீதிகள்- தவிசாளர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் மேலும் 1166 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுவதாக பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டிற்கான பாதீடு நிறைவேற்றப்பட்ட நிலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சபை எல்லைக்குள் மேலும் 1166 வீதிகள் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது.

வீதிப் புனரமைப்பு, மக்களுக்கான கட்டட அனுமதி உள்ளிட்ட மக்கள் சேவைகளை இயலுமானவரை விரைவுபடுத்தி செயலாற்றுகிறோம்.

எமது சபைச் செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுக்க சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்குவது போன்று பொதுமக்களும் எமது நிதி நிலைமை , வளப்பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியது எமது கடமை.

அந்தக் கடமையில் இருந்து சிறிதளவேனும் விலக மாட்டோம் என மேலும் அவர் தெரிவித்தார். (4-5-30)

# சஞ்சிகை வெளியீடு

(குப்பிழான்)

யாழ். சிறகுகள் அமையத்தின் வளரிளம் பருவத்தினருக்கான "அச்சாணி" சஞ்சிகை வெளியீடும் அறிமுக நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் பொதுநூலகத்தில் இடம்பெறும்.

குறித்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4-5-18)

# அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் மெய்நிகர் இணைய்வழி அரங்க கதையாடல் 48 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (4-5)



யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் திறன் வகுப்பறைத் திறப்புவிழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (படம்: கஜிந்தன்)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் இரண்டாம் மொழிச் சிங்கள சான்றிதழ் பத்திரப் பாடநெறி (தகைமை: அரச உத்தியோகத்தர் அல்லது சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல், 18 வயதிற்கு மேற்பட்டிருத்தல்), இரண்டாம் மொழிச் சிங்கள டிப்ளோமா பாடநெறி (தகைமை: அரச உத்தியோகத்தர் அல்லது சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல், 18 வயதிற்கு மேற்பட்டிருத்தல்) ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைச் சுயமாகத் தயாரித்து 2021.12.15 ஆம் திகதிக்கு முன்னர் கற்கை இணைப்பாளர் (வடமாகாணம்), தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பாடநெறியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் முன்னர் கற்கை நெறிக்கான பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டினை தங்களது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

செலுத்த வேண்டிய விபரம், பெயர், தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை வங்கி, ஹோமாகம கிளை, கணக்கிலக்கம் 074 42918, மேலதிக தகவல்களுக்கு 076 9602445 எனும் வட்ஸ்அப் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (4-5)

---

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறை சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காளான் உற்பத்தி மற்றும் பதனிடல் தொழில்நுட்பம், மண்புழு தொழில்நுட்பம் ஆகிய இரு கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை **www.agri.jfn.ac.lk** எனும் இணையத்தளத்தில் அல்லது யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களை பெற 021 206 0171 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (நி-5-33)

# கிழக்கின் நூறு சிறுகதைகள் வெளியீட்டு நிகழ்வு

(திருமலை)

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் "கிழக்கின் நூறு சிறுகதைகள்" தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருகோணமலை குளக்கோட்டம் ஒன்றுகூடல் மண்டபத்தில் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ச.நுவநீதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-5)

# போராட்டங்களால் டொலர்கள் கிடைக்காது

(கொழும்பு)

எதிர்ப்பு போராட்டங்கள் டொலர்களை ஈட்டுவதில்லை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மீளத் திறக்கக்கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பைப் பாதுகாப்பதற்காகவே கச்சா எண்ணெய் இறக்குமதியை இலங்கை நிறுத்தியதாக தெரிவித்தார்.

கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதாக இருந்தால், திறைசேரி டொலர்களை வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 320 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 140 | 200 |
| தக்காளி | 350 | 350 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 40 |
| கோவா | 200 | 250 | 240 | 280 |
| கரட் | 180 | 300 | 320 | 340 |
| பூசணி | 80 | 60 | 60 | 50 |
| புடோல் | 240 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 220 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 160 |
| பயற்றங்காய் | 350 | 400 | 240 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 100 | 300 | 80 | 80 |
| கறிமிளகாய் | 550 | 450 | 500 | 400 |
| முருங்கைக்காய் | -- | 400 | 500 | 400 |
| போஞ்சி | 400 | 420 | 400 | 480 |
| கத்தரிதம்புள்ள | 280 | 300 | - | 340 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | - | 100 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-100 |
| இராசவள்ளி | 250 | 280 | 200 | 250 |
| வெங்காயப்பூ | -- | 350 | - | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 150 | 20 | 30 |
| ஈரப்பலா | - | -- | 70 | 100 |

# பதவி விலகுகிறார் மகிந்த அடுத்த பிரதமர் யார்?

## தென்னிலங்கை ஊடகங்கள் பகீர்

(கொழும்பு)

**பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடுத்த மூன்று மாதங்களுக்குள் பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என்று அவருக்கு நெருக்கமான தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன என தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

அநுராதபுரத்தில் ருவன் வெலிசாயவில் விகாரை ஒன்றினை பிரதமர் நேற்று திறந்து வைத்தார்.

அதன்பின்னர் பிரதமர் பதவியில் இருந்து விலகி, அரசியலில் இருந்து ஓய்வுபெற மகிந்த தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமரின் உடல் நிலை மோசமாகி வருவதால் இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்தநிலையில், பிரதமர் பதவிக்கு பசில் ராஜபக்ஷவை அல்லது நாமல் ராஜபக்ஷவை நியமிப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது எனப் பிரதமருக்கு நெருக்கமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# 76 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய பிரதமர்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது 76 ஆவது பிறந்த நாளை நேற்று தனது குடும்பத்தினருடன் கேக் வெட்டி கொண்டாடினார். இலங்கை அரசியலில் அழியாத தடம் பதித்த அன்புச் சகோதரருக்கு இனிய பிறந்த நாள் நல் வாழ்த்துக்கள் என ஜனாதிபதி கோட்டாபய டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (நி-5)

# காய்ச்சல், இருமல் இருந்தால் பாடசாலைக்கு செல்ல வேண்டாம்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கோரிக்கை

(கொழும்பு)

கல்வி நடவடிக்கையை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு நாட்டில் உள்ள மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

மேலும் கொரோனா அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு அவர் தெரிவித்ததுடன் முக்கியமாக காய்ச்சல், இருமல் இருக்கும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்துக் கொள்ளுமாறு பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்தார். (நி-5)

# மட்டக்களப்பில் கோர விபத்து மூவர் ஆபத்தான நிலையில்




(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டியில் பேருந்துடன் முச்சக்கரவண்டி ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில் மூவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

குறித்த விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)




# உலக சைவத் தமிழர்களின் தாயகம் திருவண்ணாமலை

## மகா தீபத்திருநாள் 19.11.2021

உலகிலேயே முதலாவது நெருப்பு உற்பத்தியான இடம் திருவண்ணாமலை என்பது ஐதீகம். அங்கு உருவான தீப ஒளி அகிலமெங்கும் வாழும் மக்களின் வீடுகளிலும் பொது இடங்களிலும் எரிந்து கொண்டிருக்கின்றது. இருளை அகற்றி மெய்ஞான ஒளியைத் தரும் அருட் பெருஞ்சோதி தீபத்தை எல்லோரும் ஏற்றி வணங்குவோம்.

சைவசமயத்தவர்களின் பெருந்தலங்களில் திருவண்ணாமலை, சிதம்பரம், திருச்செந்தூர் ஆகியவை முக்கிய தலங்களாகும். மேற்படி தலங்களில் நடைபெறும் விசேட தினங்களில் அகிலம் வாழும் சைவத்தமிழ் மக்கள் பொதுவான விரத தினங்களாக அனுஷ்டித்து அனுக்கிரகம் பெறுவோமாக.



**கார்த்திகை மகாதீபம், பௌர்ணமி கிரிவலம்,**
**திருவெம்பாவை உற்சவம், கந்தசஷ்டி சூரன்போர்**
**எனும் விரத தினங்கள்.**

குறிப்பு: சைவப்பிரகாச பேரவையின் ஐந்தாவது ஆண்டில் பத்தாவது வெளியீடாக மாணவர்களுக்கு என இலவசமாக வெளியிட்ட "கந்தபுராண சுருக்க" நூலை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

(C-3038)

**சைவப்பிரகாச பேரவை,**
**யாழ்ப்பாணம்.**

**077 390 1877**

**வே.சிவகுருநாதன்**
**கௌரவ செயலாளர்.**

# தாயினும் மேலான எங்கள் சாயிமாதா


பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா மனித குலத்தை அன்பு வழியிலும், பக்தி வழியிலும், நடத்திச் செல்ல வந்த ஓர் யுக அவதாரம் ஆவார். ஆழ்ந்த, அகன்ற, எல்லையற்ற, முடிவேயற்ற அவரது அவதாரச் சிறப்பை வார்த்தைகளில் வடிக்க முடியாது. இதை அவருக்கு அண்மையில் இருந்து அனுபவித்து உணர மட்டுமே முடியும்.

தர்மத்தைப் போதிக்கவும் அது இன்னதென்று வரையறுக்கவும் வழிகாட்டவும் மனித குலத்திற்குப் பயன் கருதாத செயற்பாடு இன்னதென்று காண்பிக்கவும் சாயி அவதாரம் வந்திருக்கிறது. எல்லா உயிரினங்களிலும் மேலான உயிரினம் மனித இனமே. இந்த ஆண், பெண் படைப்பினில் பெண்கள் ஓர் உயர்ந்த நிலையை அடைந்திருக்கின்றனர். இத்தகைய பெண்களுக்கு மரியாதை செலுத்தும் பண்பை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டும் முகமாக பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா தனது 70 ஆவது பிறந்த தின விழா வின் போது ஒவ்வொரு வருடமும் நவம்பர் 19 ஆம் திகதியை மகளிர் தினமாக உலகம் முழுவதும் கொண் டாட வேண்டுமெனப் பிரகடனப்படுத் தியுள்ளார்.

அவ்வகையில் சாயி அடியார்களால் 2021 நவம்பர் 19, 26 ஆவது மகளிர் தினமாக இவ்வருடம் கொண்டாடப்படுகின்றது. சுவாமி இந்நாளைத் தனது பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக இணைத்து மகளிருக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

தாய்மையின் புனிதத்துவத்தைப் புரிந்து கொண்டு அது சுயநலமற்ற அன்பின் அடிப்படையில் அமைந்தது என்பதைப் புரிந்து அதை மற்றவர்களுக்கு எடுத்துப் பறைசாற்றுவதில் தான் இந்நாளின் முக்கியத்துவம் அமைந்துள்ளது.

புட்டபர்த்தியில் அமைந்துள்ள பிரசாந்தி நிலையத்தில் மகளிர் தின நிகழ்வுகள் யாவும் பெண்களாலேயே நிகழ்த்தப்படுவது சிறப்பம்சமாகும்.



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 96 ஆவது பிறந்த தின காலத்தில் மகளிர் தினம் என்கின்ற இந்த மங்கலகரமான நேரத்தில் கடந்தது கடந்து விட்டது.

நாம் எங்கு நின்றாலும் எமது தூய்மையான எண்ணங்களில், புனிதமான செயல்களில் இறைவனைக் காண வேண்டும். இன்று முதல் நம்மை நாமே வளப்படுத்துவோம், நெறிப்படுத்துவோம், ஆன்மிக சிந்தனையை இம் மண்ணிலே உண்டாக்குவோம் என்ற திடசங்கற்பம் பூணுவோம். ஏதாவது ஒரு தெய்வத்தின் மீது மனதை முழுமையாகச் செலுத்தினால் நாம் எதிர்பாராத நேரத்தில் அது கை கொடுக்கும்.

பெண்கள் நல்ல பாதையைத் தேர்ந்தெடுத்தால் ஆண்களும் அதையொற்றி வருவார்கள். எந்நேரமும் இறை சிந்தையுடனும் இறைநாம ஜபத்துடனும் வாழ்வோமேயானால் இறைவன் பாதங்களை அடைவது நிச்சயம். ஒவ்வொரு நவம்பர் 19 ஆம் திகதியையும் மகளிர் தினமாகக் கொண்டாடும் பொழுது இத்தகைய புனித எண்ணங்களை உலகம் முழுவதும் பரவச் செய்வோம்.

**திருமதி ராகினி சுந்தரலிங்கம்**
**யாழ்ப்பாணம்.**

# கனடாவைத் தாக்கிய புயல்

# 100 ஆண்டுகளில் இல்லாத பாதிப்பு

- அவசர காலநிலை பிரகடனம்
- சுமார் 10 ஆயிரம் பேர் இடம்பெயர்வு
- 300 இற்கும் அதிகமானோர் வானூர்தி மூலம் மீட்பு
- ஓடும் வெள்ளத்தில் மிதக்கும் கார்கள்

(ஒட்டாவா)

**புயல், மழை வெள்ளத்தால் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத வகையில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு நேற்று முன்தினம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

கனடாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள கடற்கரை நகரமான வான்கூவர் நகரை கடந்த திங்கட்கிழமை சக்தி வாய்ந்த புயல் தாக்கியது.

இந்த புயலை தொடர்ந்து அங்கு பேய் மழை கொட்டத் தொடங்கியது. ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் கொட்டித்தீர்த்ததாகக் கூறப்படுகிறது.

இதில் இந்த ஒட்டுமொத்த பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இடைவிடாது கொட்டிய கன மழையால் வான்கூவர் நகரில் உள்ள அனைத்து நீர்நிலைகளிலும் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.



இதனால் ஊர்களுக்குள் வெள்ளம் புகுந்து, கரை புரண்டோடுகிறது. வான்கூவர் நகரில் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. சாலைகளில் ஆறாக ஓடும் வெள்ளத்தில் ஏராளமான கார்கள் மிதக்கின்றன.

இதற்கிடையில் கனமழை மற்றும் வெள்ளத்தை தொடர்ந்து பல இடங்களில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. அங்குள்ள நெடுஞ்சாலையில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் அந்த வழியாகச் சென்ற வாகனங்கள் பல சிக்கின.

இதனிடையே வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் துண்டிக்கப்பட்ட சாலைகளில் சிக்கியிருந்த 300 இற்கும் அதிகமானோர் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டனர்.

கனடாவின் மிகப்பெரிய துறைமுகம் வான்கூவரில் உள்ளது. அங்கு வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக உணவு, எரிபொருள் மற்றும் பிற பொருட்களின் ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளது.


மேலும், அனைத்து ரயில் போக்குவரத்தையும் நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

புயல், மழை, வெள்ளத்தால் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசு தெரிவித்துள்ளது.

மேலும் புயல், மழை, வெள்ளப் பாதிப்பு காரணமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பாரவூர்தியுடன் மோதியது ஹயஸ் ஆறு பேர் படுகாயம்

## மகளின் பதிவுத் திருமணத்திற்காகச் சென்ற வேளை பரிதாபம்



(குருமன்காடு)

பதிவு திருமணத்திற்காக வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனம் விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்தனர்.

வ்வுனியா - கொழும்பு வீதியில் உள்ள கல்கமுக பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹயஸ் வாகனம் நேற்று அதிகாலை மோதி இவ் விபத்து இடம்பெற்றது.

கொழும்பில் இடம்பெறவிருந்த தமது மகளின் பதிவுத் திருமணத்திற்காக வவுனியா தோணிக்கல் பகுதியில் இருந்து சென்ற குடும்பத்தினரே விபத்துக்குள்ளாகினர்.

விபத்தில் வாகன சாரதி மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உட்பட 6 பேர் படுகாயமடைந்த நிலையில் கல்கமுக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை கல்கமுக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-5-250)

# தனியார் பேருந்து சேவை திங்கள் முதல் வழமைக்கு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிற்கு பணியில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்து சேவை ஒழுங்கின்மை காரணமாக பல பாடசாலைகளின் மாணவர்கள் போக்குவரத்து செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

காலை 6.40 மணிக்கு மாந்தை கிழக்கின் பனங்காமம் சந்தியில் இருந்து பயணிக்கும் பேருந்து பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், செல்வபுரம் பாடசாலை, குமரசாமி வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுடன் மல்லாவிக்குச் செல்வது வழமை.

மாணவர்களை ஏற்றிச் செல்லும் பேருந்து மீண்டும் மாந்தை கிழக்கிற்கு வருவதில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவர் நா.சற்குணராஜாவிடம் கேட்டபோது மாணவர்கள் வீடு திரும்புவதற்கும் தனியார் பேருந்து சேவையை நடத்த வேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளரினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை சகல பாடசாலைகளும் தொடங்க உள்ள நிலையில் மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பக் கூடிய வகையில் பேருந்து சேவையை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். (4-5-350)

# பத்து ஆண்டுகளாக தொடரும் கிரவல் மண் அகழ்வு



(அக்கராயன்)

அக்கராயன் பொன்னகர் கிராமங்களில் கிரவல் மண் அகழ்வு கடந்த பத்தாண்டுகளாக தொடர்கின்றது.

ஏற்கனவே சிறிய காடுகளைக் கொண்ட இப்பிரதேசங்களில் கிரவல் அகழ்விற்காக பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு கிரவல் அகழ்வு நடைபெறுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அமதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெருமளவு கிரவல் அகழ்வு நடைபெற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் எடுத்த நடவடிக்கை காரணமாக மரங்கள் அழிக்கப்பட்ட பகுதிகளில் மரமீள்நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போல் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்மர நடுகைகள் இடம் பெற வேண்டும் எனவும் கிரவல் அகழ்வைத் தடுக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (4-5-350)

# மதுபோதையில் நின்ற குழுவினர் வீதியால் சென்றோர் மீது தாக்குதல்

## ஆசிரியர் ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் மதுபோதையில் இளைஞர் குழுவொன்று வீதியால் சென்றவர்களை வழிமறித்து தாக்கியதில் ஆசிரியர் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு பின்னர் சுமார் ஒரு மணி நேரமாக குறித்த இளைஞர் குழு அவ் வீதியால் பயணிப்பவர்களை வழிமறித்து தாக்குதல் மேற்கொண்டதுடன், வீதியின் குறுக்கே தமது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி அட்டகாசம் புரிந்தனர்.

இதன்போது குறித்த ஆசிரியர் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுனியா வைரவர் கோவில் வீதி, கதிரேசு வீதி, மன்னார் வீதி ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக இளைஞர் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (4-5-250)

# மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு வவுனியாவில் 8 பேருக்கு தடையுத்தரவு

(நெளுக்குளம்)

மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பதற்கு வவுனியா நீதிமன்றம் 8 பேருக்கு தடை உத்தரவினை வழங்கியுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை மாவீரர் நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கமைய வவுனியா நீதிமன்றம் குறித்த 8 பேருக்கு தடை உத்தரவினை வழங்கியுள்ளது.

அந்த வகையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், காணாமல் போனவர்களின் உறவினர்களின் சங்கத்தினை சேர்ந்த செயலாளர் கோ.ராஜ்குமார், தலைவி கா.ஜெயவனிதா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கயேந்திரகுமார், சு.தவபாலசிங்கம், செ.அரவிந்தன் ஆகியோருக்கு குறித்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி நீதிமன்றில் பிரசன்னமாகுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4-5-299)



வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற்றது. (படம்:-சதீஸ்)

# இந்து ஆலயங்களின் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(பனிக்கன்குளம்)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 74 இந்து ஆலயங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஒட்டுசுட்டான் பிரதேச இந்து ஆலயங்களின் ஒன்றியம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலனின் தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே குறித்த அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (4-5-281)



கொமர்ஷல் வங்கியின் நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டு மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் அபிவிருத்தி வகுப்பறை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கல்லூரி அதிபர் வி.பாலபவன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்:-ஜோசப்நயன்)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 14.11.2021-12.11.2022

## பன்னிரெண்டில் வந்தது குரு பகவான்; பண விரயங்கள் அதிகரிக்கும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**எந்த வேலையைச் செய்தாலும் அதில் தனது முத்திரையைப் பதிக்கும் மீன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்திற்கு சஞ்சரித்து வந்த குரு பகவான் 13.11.2021 முதல் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 12 ஆம் இடம் என்பது பயணங்களைக் குறிக்கும் இடமாகும். அயன, சயன ஸ்தானமாகவும் கருதப்படுகின்றது.

உங்கள் இராசிநாதனாகவும் தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் குரு, விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாங்கிய இடம், பூமிகளை விற்க நேரிடும். சனியின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

தொழிலில் முழுமையாக ஈடுபட இயலாது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு தான் திறமையாகச் செயற்பட்டாலும் அவர்களுக்குரிய அங்கீகாரம் கிடைப்பது அரிது. பணிபுரிபவர்களுக்கு திடீர், திடீரென மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு உங்கள் சுய ஜாதகத்தில் திசாபுத்திக்குரிய தெய்வங்களை வழிபடுவதன் மூலம் நல்ல மாற்றங்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

### குருவின் பார்வை பலன்

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக குருபகவான் உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கப் போகின்றார். எனவே அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றது. 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதற்கேற்ப அவர் பார்வை பலத்தின் மூலம் சில நன்மைகளும் உங்களுக்கு கிடைக்கும்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையைச் சரிவரச் செய்து முடிப்பீர்கள். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் ஜீவன ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிநிரந்தரம் ஆகாதவர்களுக்கு இப்பொழுது பணி நிரந்தரம் ஆகலாம்.

குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் உருவாகும். பொதுவாழ்வில் இருப்பவர்கள் இழந்த பதவியை மீண்டும் பெறுவர்.

### நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்

**செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (13.11.2021 முதல் 12.12.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். எனவே இக்காலத்தில் குடும்ப முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்கிக் குடியேற வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது அதற்காக எடுத்த முயற்சி கைகூடும்.

**ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (13.12.2021 முதல் 1.3.2022 வரை)**

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகு சஞ்சரிக்கின்றார். அவர் இருக்கும் வீடு சுக்கிரனது வீடாகும். நிழல் கிரகமாக ராகு விளங்குவதால் அந்த ஸ்தானாதிபதிக்குரிய பலன்களையே வழங்குவார். வழக்குகள் சாதகமாக முடிவடையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.




பிள்ளைகளின் வேலை வாய்ப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2022 முதல் 13.4.2022 வரை)**

குரு உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குவதால் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமாகும். எனவே இராசிநாதனாக விளங்குவதால் தன சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றங்களை வழங்குவார்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

குருப்பெயர்ச்சி காலத்தில் 21.3.2022 இல் ராகு-கேது பெயர்ச்சியும் நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் இப்பொழுது 2 ஆம் இடத்திற்கு வரப்போகின்றார். 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது இனி 8 ஆம் இடத்திற்கு வரப்போகின்றார். எனவே சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கம் அதிகரிக்கின்றது.

தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு தனவரவைக் கொடுத்தாலும், அஷ்டமத்து கேது அதிக அளவில் மனநிம்மதிக் குறைவை ஏற்படுத்தும். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வதன் மூலம் சந்தோசத்தை தக்க வைத்துக் கொள்ள இயலும்.

**சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு பகவான் படம் வைத்து, குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது. மேலும் யோக பலம் பெற்ற நாளில் துர்க்கை அம்மனை வழிபடுவதன் மூலம் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

**செவ்வாய் - சனி பார்வை மற்றும் சேர்க்கை**

13.11.2021 முதல் 6.12.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலம்,

26.2.2022 முதல் 6.4.2022 வரை மகரத்தில் செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம்.

இக்காலத்தில் மிக மிக கவனம் தேவை. பணத்தட்டுப்பாடுகள் அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்களை விட்டு விலக நேரிடும். முக்கிய புள்ளிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரமாவதில் தாமதம் ஏற்படும். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகளும் கூடும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய இயலாது.

**பெண்களுக்கான பலன்கள்**

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு குடும்பச்சுமை அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் விரயங்கள் கூடும். கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் ஒற்றுமையை தக்க வைத்துக் கொள்ளலாம். குழந்தைகளின் எதிர்காலத்தை முன்னிட்டு எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

(முற்றும்)

# அதிகரிக்கும் கொவிட் தொற்று

## பாடசாலைகள் மீண்டும் மூடப்படலாம்

### மருத்துவ நிபுணர் தீபால் எச்சரிக்கை

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களிடையேயும் தற்போது கொவிட் தொற்று அதிகரித்துள்ளதன் விளைவாக பாடசாலைகளை மீண்டும் மூட வேண்டியிருக்கும் என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் நிபுணர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்தார்.**




இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், தற்போது இலங்கை முழுவதும் கொவிட் தொற்றுக்கு இலக்கான நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகிறது.

குழந்தைகள் மத்தியிலும் கொவிட் தொற்று அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. எனவே இவ்வாறு அதிகரித்தால் மீண்டும் பாடசாலைகளை மூட வேண்டி ஏற்படலாம்.

அத்துடன் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை கடுமையாகப் பின்பற்ற வேண்டும். அதனை விடுத்து நோயை வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தினார். (நி)

## கோட்டாபய ஆட்சி; இரு ஆண்டுகள் பூர்த்தி

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு நேற்றுடன் (வியாழக்கிழமை) இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

2019 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்கியிருந்தார். குறித்த தேர்தலில் அவர் 52.25 சதவீத வாக்குகளைப் பெற்று இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 7 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## சீமெந்து தொழிற்சாலையில் 43 பேருக்கு தொற்று

(கொழும்பு)

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும், சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றி வந்த இந்திய பிரஜைகள் 43 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அங்கு பணியாற்றி வந்த 50 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் 43 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. குறித்த தொழிற்சாலையில் 780 இலங்கையர்களும், 480 இந்தியர்களும் பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## கோழி இறைச்சியின் விலையில் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பின் சில பகுதிகளில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 830 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

2 கிலோகிராம் கோழி இறைச்சியை கொள்வனவு செய்வதற்கான பணத்தில் தற்போது ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை மாத்திரமே கொள்வனவு செய்ய முடிவதாகவும் கோழி இறைச்சிக்கு நிர்ணய விலை அறிவிக்கப்பட வேண்டும் எனவும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# மருந்துகளுக்கு விலை நிர்ணயம்; மீறினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய மருந்துகள் சிலவற்றுக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் உயர்ந்துள்ளதாகவும் அவை விலை கட்டுப்பாடின்றி விற்பனை செய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 60 மருந்துகளின் 131 வகைகளின் விலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கான ஆகக்கூடிய சில்லறை விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த மருந்துகளில் எதனையும் அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் விற்பனை செய்வது சட்டவிரோதமானது. கட்டுப்பாட்டு விலையை மீறி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டால் complaints@nmra.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக அறிவிக்க முடியும் என அமைச்சின் செயலாளர் வைத்தியர் ஆர்.எம்.எஸ்.கே. ரத்நாயக்க தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## வரப்போகும் கஷ்டங்களை நினைத்து வருத்தப்படுகிறீர்களா?

வேண்டாம், கஷ்டங்கள் விடாது நம்மை வந்து துரத்துகின்றன. இது ஒன்றும் நமக்குப் புதியல்ல.

எனவே அவற்றை வரவேற்கவும் சமாளிக்கவும் நாம் தயாராகி விட வேண்டியது தான் புத்திசாலித்தனமான செயலாகும்.

பெரும்பாலான கஷ்டங்களை நாமே இழுத்துப் போட்டுக்கொள்கிறோம். நம்முடைய செயல்களையும் திட்டங்களையும் விஸ்தரித்துக்கொண்டு அகலக்கால் வைப்பதால் தான் இல்லாத தொல்லைகளெல்லாம் வந்து சேருகின்றன.

வரப்போகும் கஷ்டங்கள் முன்கூட்டியே தெரிந்து விடுவதால் ஓர் அனுகூலம் இருக்கிறது. எதிரி நம்மை அடிக்கப்போகிறான் என்பதை உணர்ந்ததும் நம் உடம்பு அதை ஏற்றுக்கொள்ளவோ தப்பிக்கவோ தயாராகி விடுவதைப் போல நம் மனமும் வரப்போகும் கஷ்டங்களை எண்ணி அவற்றின் விளைவுகளைச் சந்திக்கத் தயாராகி விட வேண்டும்.

எதிர்பாராத அடிகளை நம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

ஆனால் எதிர்பார்த்த அடிகளையும் நம்மால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை என்றால் அது மனப்பக்குவம் அற்ற நிலையைக் காண்பிக்கிறது.

எவ்விதக் கஷ்டமும் அது ஏற்படும்போது பெரிதாகத்தான் தோன்றும். அப்புறம் பார்த்தால் இதற்காகவா கஷ்டப்பட்டோம் என்று எண்ணத் தோன்றும்.


சில நாட்களில் அதை மற்றவர்களிடம் நகைப்புக்கு உரிய விடயமாகச் சொல்லும் நிலைமை கூட உருவாகும்.

நேரத்துடன் காலத்துடன் கஷ்டங்கள் பொதுவாக மறைந்து விடுகின்றன. ஆகையால் எதையும் எண்ணித் தேவையில்லாமல் துன்பங்கொள்ளக்கூடாது.

எப்படிப்பட்ட துன்பத்தையும் சமாளிக்கக் கூடிய மனப்பக்குவத்தை இறைவா! எனக்கு நீ அருள் புரிவாயாக என்று வேண்டிக் கொள்ள வேண்டும். இறைவனிடத்தில் நம்பிக்கை இல்லாதவன் இத்தகைய மனப்பக்குவத்தைத் தானாகப் பெற முயல வேண்டும்.


இவற்றை விட்டுவிட்டு எதற்கெடுத்தாலும் வருந்திக் கொண்டிருந்தால் கட்டுப்படியாகாது.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## பூனைகளைச் சிறைப்படுத்திய எலிகள்



பூனைகள் இல்லா உலகில் யாருக்குக் கொண்டாட்டம்? சொல்லவும் வேண்டுமா? நிச்சயம் எலிகளுக்குத்தான்.

பூனைகள் இல்லாத ஊர் இந்த உலகில் இருக்குமா? இருக்கிறதே. நளினப்பட்டி என்ற ஊரில் பூனைகளே இல்லை.

இந்தத் தகவலைப் பல நாடுகளில் உள்ள எலிகளுக்கும் கடிதம் மூலம் தெரிவித்தன நளினப்பட்டியில் உள்ள தலைமை எலிகள்.

"அப்படியா?" என ஆச்சரியப்பட்டு அந்த ஊரைக் காண ஆபிரிக்காவில் இருந்து குலி, மாலி என்ற இரண்டு எலிகள் விமானம் மூலம் நளினப்பட்டிக்கு வந்தன.

விருந்தாளி எலிகளுக்குத் தடபுடலாக வரவேற்பு அளிக்கப் பட்டது. அனைவருக்கும் சிறப்பு விருந்து பரிமாறப்பட்டது.

ஒரு பாழடைந்த கோட்டை தான் எலிகளின் கோட்டை. விருந்தாளி எலிகளும் அங்கு தங்க வைக்கப் பட்டன.

"இந்த ஊரில் பூனைகள் இல்லை என்பதை நாங்கள் எப்படி நம்புவது?" என குலி எலி கேட்டது.

"சந்தேகம் இருந்தால், நீங்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்" என்று நளினப்பட்டி எலி தலைவர் பதில் கூறியது.

"அப்படியென்றால் இன்று இரவே நாங்கள் சோதனைக்குத் தயார்" என இரு எலிகளும் உற்சாகமாயின.

இரவில் இரு ஆபிரிக்க எலிகளும் சோதனைக்குப் புறப்பட்டன. தெருத் தெருவாகச் சுற்றின. சந்து பொந்துகளில் எல்லாம் எலிகள் ஏறி இறங்கிப் பார்த்தன. அட! எங்குமே பூனைகள் தென்படவில்லை. அவைகளுக்கு வெகு ஆச்சரியம்.

"இந்த ஊரில் பூனைகள் இல்லைதான்" என்று இரு எலிகளும் பேசிக்கொண்டன. ஊர்க் கோடியில் ஒரு பாழடைந்த மலைக் கோயில் ஒன்று உள்ளது. அங்கு மட்டும் ஆபிரிக்க எலிகள் போவதற்கு, நளினப்பட்டி எலிகள் தடை விதித்திருந்தன. அப்போது தான் குலி எலிக்கு ஞாபகம் வந்தது.

அந்த மலைக்கோயிலுக்குச் செல்லக்கூடாது என ஏன் உள்ளூர் எலிகள் தடை விதித்தன?" எனக் குலி எலி, மாலி எலியைப் பார்த்துக் கேட்டது.


"ஆமாம், ஏன் அப்படிக் கூறின? நாம் அங்கு பரிசோதிக்காமல் ஒரு முடிவுக்குவரமுடியாதே?" என மாலி எலியும் கேள்வி எழுப்பியது.

அப்போதே இரு ஆபிரிக்க எலிகளும் மலைக் கோயிலுக்குச் செல்வது என முடிவு செய்தன. பொழுது விடிந்தது.

நகர் வேட்டைக்குச் சென்றுவந்த எல்லா எலிகளும் பகலில் ஓய்வெடுக்கச் சென்றன. அனைத்து எலிகளும் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தன. (தொடரும்)

# மகாபாரதம்

249



அதனால் எங்கள் சினத்திற்கு ஆளாவதில்லை. நாங்கள் வரும் போது வளைந்து கொடுத்துப் பின் நிமிர்ந்து நிற்கின்றது.

அது சமய சந்தர்ப்பத்திற் கேற்றவாறு எங்களுக்கு அடங்கி எங்கள் தலைமையை ஏற்றுக் கொள்கிறது. அதனால் அதன் இடத்திலேயே இருக்கின்றது. இங்கு வருவதில்லை.

எந்தச் செடியாயினும் கொடியாயினும் மரமாயினும் எங்கள் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது. ஆதலால் பணிந்து போவது மட்டும் நிலைத்து வாழ்கிறது.

பணிவுடைமையை அறியாது விறைத்து நிற்பவை நிலைத்து நிற்காது எங்களால் அடித்து வரப்பட்டு இங்கே நிலை குலைந்து வீழ்கின்றன."

"கங்கையின் இந்தக் கூற்றிலிருந்து தருமரே! ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அரசர்களுக்கு இக்கதை நல்ல பாடம்.

பகைவனின் பேராற்றலின் முன் நிற்க முடியாது என்று தெரிந்தால் அந்த நேரத்துக்குப் பணிதல் வேண்டும்.

பின் நாணலைப் போல நிலைத்து வாழலாம். பகைவரின் ஆற்றலை உணர்த்தும் பணிவின்றி சேண் உயர் தேக்கு போல் நிமிர்ந்து நின்றால் முறிந்து விழ வேண்டியது தான் என்ற தெளிவு யாவர்க்கும் வேண்டும்" என்றார் பீஷ்மர்.

**செல்வமாகக் கருத வேண்டியவை எவை?**

ஞானம், சத்தியம், ஆசை, தியாகம் அகிய வற்றின் தன்மையை விளக்குமாறு கேட்டுக் கொண்ட தருமருக்கு பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

"தருமா..இது சம்பந்தமாக ஒரு தந்தைக்கும் மகனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தருகிறேன்.

வேதம் ஓதுவதையே தமது வாழ்க்கையின் முக்கியமாகக் கருதினார் ஒரு அந்தணர். அவருக்கு மேதாவி என்றொரு மகன் இருந்தான். பெயருக்கு ஏற்ப அவன் மேதாவியாக விளங்கினான்.

முக்தியைப் பற்றிய அறிவும் அவனிடம் இருந்தது. அவன் தந்தையிடம், "தந்தையே! மனிதனின் ஆயுள் மிகக் குறைவாக இருக்கிறதே. இந்தக் குறைந்த ஆயுளில் நிறைந்த புண்ணியத்தைப் பெறுவது எப்படி?" என வினவினான்.

தந்தை பதில் உரைத்தார்.. "மகனே முதலில் பிரம்மச்சர்யத்தில் இருந்து கொண்டு வேதம் ஓதுதல் வேண்டும். பிறகு இல்லறத்தில் ஈடுபட்டுச் சிரார்த்தம் முதலான நற்காரியங்களுக்காக மைந்தர்களைப் பெற வேண்டும்.

பின் மூன்று அக்கினிகளை உண்டாக்கி, முறைப்படி யாகம் செய்ய வேண்டும். இறுதியில் காட்டுக்குச் சென்று தவம் இயற்றி முக்திப் பேற்றை அடைய வேண்டும்."

தந்தையின் இந்தப் பதிலில் திருப்தியடையவில்லை மகன். அவனது நல்லறக் கருத்துகள் வேறுவிதமாய் இருந்தன. "உலகத்தின் இயல்பை நீ நன்கு அறிந்து கொள்ளவில்லை போலும்.

(தொடரும்)

நீங்கள் நேர்மையான மனிதரா? தடைகளையும் துயரங்களையும் கண்டு அஞ்சாமல் உண்மையின் பாதையில் தைரியமாக செல்லுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 'நந்தி ஒழிக' என்பது பொருள் கோடல் தவறேயாம்

அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பொலிஸார் தடையாக இருந்தனர் எனக் குற்றம்சாட்டி அந்தக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது **நந்தி ஒழிக!** என்ற வாசகம் அடங்கிய பதாதைகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏந்தியமை சர்ச்சைக்குரிய விடயமாயிற்று.

அதாவது நந்தி என்பது தமிழர்களின் கொடி. தமிழ் இனத்தின் அடையாளம் என்றும் உரைக்கலாம்.

நிலைமை இதுவாக இருக்கையில், நந்தி ஒழிக என்றவாறு பதாதை ஏந்தப்பட்டபோது, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சைவத் தமிழ் அமைப்பினரும் அதிர்ச்சியடைந்து அதற்கு எதிராகக் கண்டனமும் வெளியிட்டனர்.

மேற்படி, நந்தி ஒழிக என்ற வாசகம் இவ்வாறானதொரு சூழமைவை ஏற்படுத்துமென ஐக்கிய மக்கள் சக்தியினர் இம்மியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

நந்தி போல இடையில் நிற்காதே என்ற கிராமத்து மொழி நடையைக் கருத்தில் கொண்டு, நந்தி என்பது தடையாக இருப்பது என பொருள் விளங்கி; நந்தி ஒழிக எனக் கருத்தேற்றம் செய்ததே மேற்போந்த சர்ச்சைக்குக் காரணம் எனலாம்.

இதனை அவர்கள் கொடுத்த விளக்கமும் களநிலையும் தெளிவுபடுத்தி நிற்கிறது.

ஆக, நந்தி போல இடையில், பொலிஸார் தடையாக இருப்பதைப் பொருள்படுத்த முற்பட்டபோதே நந்தி ஒழிக என்ற வாசகம் ஏற்பட்டதேயன்றி அதற்குள் தமிழினத்தின் கொடியாக – தமிழ் இனத்தின் அடையாளமாக நந்தி பார்க்கப்படவில்லை என்பது புலப்படுகிறது.

இந்த வகையில், இஃது பொருள்கோடல் தவறேயன்றி வேறில்லை என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

எனினும் இங்கு ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவெனில், நந்தி ஒழிக என்ற பொருள் கோடல் தவறுக்கு இத்துணை தூரம் கண்டனமும் கவலையும் வெளியிட்டவர்கள்,

மன்னார் திருக்கேதீச்சரத்தில் நந்திக் கொடியை சப்பாத்துக் காலால் உழக்கியவர்களை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலின் இரு மருங்கிலும் இருந்த நந்திச் சிலைகளை அடித்து உடைத்தழித்தவர்களைக் கண்டிக்காமலும் கண்டுகொள்ளாமலும் விட்டது ஏன்? என்பதுதான் புரியவில்லை.

எதுவாயினும் தமிழ் இனத்தில் – சைவ சமயத்தில் நந்தி பெற்றுள்ள முதன்மை பற்றி ஏனைய இனத்தவர்களும் சமயத்தவர் களும் அறியுமாறு செய்வதும் நம் கடமை என்றுணர்வது இங்கு அவசியமாகிறது.

## வரவு – செலவுத் திட்டமானது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சாதகமாக அமையவில்லை

### சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சாதகமாக அமையவில்லை.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் சிறந்த தீர் மானம் எடுக்கப்படும் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒரு பங்காளி கட்சியாக ஒன்றிணைந்திருந்தாலும் அரசாங்கத்தின் கொள்கைக்கும், சுதந்திர கட்சியின் கொள்கைக்கும் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடும், கொள்கைகளும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு முரணாக அரசாங்கம் செயற்படுவதை பல்வேறு காரணிகள் ஊடாக சுட்டிக்காட்டலாம். தவறான தீர்மானங்களினால் நடுத்தர மக்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பாரளுமன்றில் சமர்ப்பித்துள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சாதகமாக அமையவில்லை. பல விடயங்கள் முரண்பட்ட வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார். (ஞா)

## இந்த நூற்றாண்டின் மிக நீண்ட சந்திர கிரகணம் இன்று நிகழ்கிறது

(கொழும்பு)

இந்த நூற்றாண்டின் அபூர்வ நிகழ்வான, மிக நீண்ட சந்திர கிரகணம் இன்று நிகழவுள்ளதாக வானியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரியன், சந்திரன், பூமி மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணங்கள் நிகழ்கின்றன. அப்போது சந்திரனின் நிழல் சூரியனை மறைத்தால் அது சூரிய கிரகணம் எனவும், பூமியின் நிழல் சந்திரனை மறைத்தால் அது சந்திர கிரகணம் எனவும் அழைக்கப்படுகிறது. ஆண்டுதோறும் சராசரியாக 4 கிரகணங்கள் வரை நிகழும்.

சந்திரனை பூமி முழுமையாக மறைத்தால் அது முழுச் சந்திர கிரகணம் என்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் மறைத்தால் அது பகுதிக் கிரகணம் என்றும் கூறப்படுகிறது.

அந்தவகையில் இந்த நூற்றாண்டின் நீண்ட சந்திர கிரகணம் இன்று நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி காலை 11.32 மணி முதல் மாலை 5.34 மணி வரை (6.02 மணி நேரம்) கிரகணம் நிகழும். 580 ஆண்டுகளுக்குப் பின் நீண்ட சந்திர கிரகணம் 1440 ஆம் ஆண்டு பெப் ரவரி 18 ஆம் திகதி ஏற் பட்டது. சுமார் 580 ஆண்டுகளுக்கு பின்பு தற்போது தான் நெடிய கிரகணம் தோன்றவுள்ளது.

இத்தகைய நிகழ்வு மீண்டும் 2669 ஆம் ஆண்டு பெப்பிரவரி 8 ஆம் திகதி தென்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சந்திர கிரகணத்தை வடகிழக்கு ஐரோப்பா, . கிழக்கு ஆசியா, பசிபிக் பெருங்கடல் பகுதிகள், அவுஸ்திரேலியா, வடக்கு மற்றும் தென் அமெரிக்கா உள்ளிட்ட இடங்களில் பார்க்க முடியும். (ஞா)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதி பலிப்பே."**

**- மகாத்மா காந்தி**
**(இந்திய தேசபிதா)**

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்**

முதுமைக்கு வேண்டின் இளமையில் தேடு. மறுமைக்கு வேண்டின் இறைமையில் தேடு. உணவு தேடுவதோடு உணர்வும் தேடு. செல்வம் அழியாமலிருக்க ஏழைகள் கண்ணீர், பிறர் பொருளின் மேல் ஆசை, அநியாய வழியில் பொருள் ஈட்டல் முதலியன கூடாது, ஒருமையுணர்வு இருமையும் தரும், செல்வம் அடைக்கலத்தால் நிலை பெறுகின்றது.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அளவெட்டி, அளுக்கை, புற்றுநோய் மருத்துவமனை, தெல்லிப்பழை, ஏழாலை, கணேஸ்வரம் தெல்லிப்பழை, கீரிமலை வீதி, மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, அளவெட்டி பலநோக்கு கூட்டுறவு சபை, மாதனை, தெல்லிப்பழை, மல்லாகம் சந்தி, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மாவை கலட்டி, நகுலேஸ்வரம் (கீரிமலை), மல்லாகம் நீதிமன்றம் பிரதேசம், பன்னாலை, பொன்மலர் கடை அளவெட்டி வடக்கு, தெல்லிப்பழை (ஆனைக்குட்டி மதவடி), தெல்லிப்பழை சந்தி, துர்க்காபுரம், மல்லாகம் நீதிமன்றம், கடற்படை முகாம் கீரிமலை, திண்மக் கழிவு நீக்கம் கீரிமலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கல்மடுநகர், பெரியகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பிரச்சினையின் வால்

தீர்வு காணமுடியாத போது அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறீர்கள். எனவே இனி அது பிரச்சினையே அல்ல. தீர்வு காணமுடியாத பிரச்சினை என்று எதுவுமில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வு எதுவுமில்லை என்று நினைக்கும் கணமே பிரச்சினை என்பது பிரச்சினையே அல்ல என்றாகி விடுகிறது.

தீர்வு என்பது பிரச்சினையின் வால் ஆகும்.

அமைதியாகவும் தெளிவுடனும் இருக்கும்போது

அறிவுத்திறத்தைப் பயன்படுத்தும் போது

அசட்டையாக இல்லா சுறுசுறுப்புடன் இருக்கும் போது

தெய்வீக நியதியில் திட நம்பிக்கை கொண்டிருக்கும் போது நீங்கள் தீர்வுகளைக் காண்கிறீர்கள்.

(தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

**18**

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### நீங்களும் முயற்சிக்கலாம் 11

 ன் பெறுமானம் என்ன?


விடை




=6859

 ன் பெறுமானம் என்ன?


விடை





= 9433

## சிஸ்டெர்சியன் எண் முறைமை

உரு 7 இல் உள்ள விளக்கப் படத்தில், இவை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.




### நீங்களும் முயற்சிக்கலாம் 12

 ன்

பெறுமானம் என்ன?


விடை

9+50+20+800 =879

## ஃபீனிசியன் எண்முறைமை

ஆஸ்டெக் எண் முறைமை (Aztec number system) **(14-16 நூற்றாண்டுகள்).**


இன்றைய மெக்ஸிக்கோவின் மையப் பகுதியையே அன்றைய ஆஸ்டெக் பேரரசு (Aztec Empire) ஆக்கிரமித்து இருந்தது. இப் பேரரசு 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 16 ஆம் நூற்றாண் டின் ஆரம்பம் வரை நீடித்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும். ஆஸ்டெக் எண் முறைமை (Aztec number system) 20 அடியாகக் கொண்ட முறைமையாகும். பயன்படுத்தப்படும் குறியீடுகள், புள்ளிகள் மற்றும் அடையாளங்கள் (glyphs) உரு 8 இல் காட்டப்பட்டுள்ளன. ஆஸ்டெக் எண் முறைமையில் ஒரு இலக்கத்தை பல வழிகளில் காட்ட முடியும். 8375 இலக்கத்தை காட்டும் முறையில் சிலவற்றை உரு 8 A காட்டுகிறது.




ஆஸ்டெக் எண் முறைமையில் சோளப்பருப்புகள் ஒன்று முதல் ஒன்பது வரையான எண்களைக் குறிக்கும். பத்து ஒரு வைரத்தால் குறிக்கப்படுகிறது. இருபது ஒரு கொடியால் குறிக்கப்படுகிறது.

வெவ்வேறு இறகுகள் (அதில் உள்ள சரிவான கோடுகள்) நூறு, இருநூறு போன்ற நூறுகளைக் குறிக்கின்றன. ஒரு பை நிறைந்த கொக்கோ பருப்புகள் (cacao beans) 8000 ஐக் குறிக்கிறது.

ஆஸ்டெக் எண் முறைமையில் பூச்சியத்திற்கான குறியீடு இல்லை. மேலும் இது ஒரு குறியீடுகளுக்கான வரிசை இல்லாத சேர்க்கை அமைப்பாகும். இவையெல்லாம் உரு 8 இல் காட்டப்பட்டுள்ளன




**அட்டிக் எண்கள் (Attic numerals)**

அட்டிக் எண்கள் (Attic numerals) என்பது பண்டைய கிரேக்கர்கள் பயன்படுத்திய குறியீட்டு எண் முறைமையாகும். அவை ஹெரோடியன் எண்கள் (Herodianic numerals) என்றும் அழைக்கப்பட்டன, ஏனெனில் அவை முதலில் 2 ஆம் நூற்றாண்டின் கையெழுத்துப் பிரதியில் ஹெரோடியன் என்பவனால் விபரிக்கப்பட்டிருந்தது.

அட்டிக் எண்கள் பழைய எகிப்திய மற்றும் பிற்கால எட்ரூஸ்கான், உரோமன் மற்றும் இந்து-அரபு அமைப்புகளைப் போலவே தசம (அடிப்படை 10) அமைப்பாக இருந்தன. அதாவது, குறிப்பிடப்பட வேண்டிய எண்ணிக்கை ஒன்றுகள், பத்துகள், நூறுகள், ஆயிரங்கள் என்பவற்றின் எளிய மடங்குகளாக பிரிக்கப்பட்டன.

பின்னர் இந்த பாகங்கள் மதிப்பைக் குறைக்கும் பொருட்டு வரிசையாக எழுதப்பட்டன. அடிப்படை உரோமானிய முறையைப் போலவே, ஒவ்வொரு பகுதியும் இரண்டு குறிகளின் சேர்க்கையைப் பயன்படுத்தி எழுதப்பட்டன, கி.மு. 7 ஆம் நூற்றாண்டில் தொடங்கி அட்டிக் எண்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பாவிக்கப்பட்ட குறியீடுகளும் அதன் பெறுமானமும் உரு 9 இல் காட்டப்பட்டுள்ளது.

### நீங்களும் முயற்சிக்கலாம் 13

 ன்

பெறுமானம் என்ன?

விடை =8000+300+60

= 8360

## ஆஸ்டெக் எண் முறைமை

உரு 9 அட்டிக் எண்கள் (Attic numerals)

| Ι | ΙΙ | ΙΙΙ | ΙΙΙΙ | Γ | ΓΙ | ΓΙΙ | ΓΙΙΙ | ΓΙΙΙΙ | Δ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

1 - 10 in Greek acrophonic numbers

| Δ | 𐅄 | Η | 𐅅 | Χ | 𐅆 | Μ | 𐅇 |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 50 | 100 | 500 | 1000 | 5000 | 10000 | 50000 |

Higher numbers and combining acrophonic numerals

**அட்டிக் எண்கள் - உதாரணங்கள்**

(1) ΧΧ𐅅ΗΔΔΔΔΓΙΙ

2x1000+500+100+4x10+5+2+1 =2647

(2) ΧΧ ΧΧ𐅅ΔΓΙΙ

4x1000+500+1x10+5+2 = 4517

(தொடரும்)

## மரணம் - 15...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,072 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 737 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 554,459 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## பருத்தித்துறை...

மதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்துவந்த 74 வயதுடையவர் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## உயிரிழந்த...

போதனா வைத்தியசாலை யின் வெளி நோயாளர் பிரிவு ஊடாக குறித்த முதியவரின் பிசிஆர் மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த நபருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 73 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## ஆர்ப்பாட்டத்தை...

பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்முகத்தேர்வு கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றபோது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும் கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு அதற்கு ஏற்றால்போல் ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். காரணம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் அவை தொடர்பில் கவனம் செலுத்த முடியாது.

பெரும்பாலானவர்கள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது எவ்வாறு தொற்று பரவும் என்பதை அனைவரும் அறிவர். எவ்வாறிருப்பினும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது என்றார். (ஞா)

## வவுனியா...

கமுக பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹயஸ் வாகனம் நேற்று அதிகாலை மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (ஞா)

*(முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்)*

## சுன்னாகத்தில்...

யில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் மீது நேற்று வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உறவுப்பகை காரணமாகவே அயலில் உள்ளவரால் இந்த வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாள்வெட்டிற்கு இலக்கான அம்பனை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஞா-18,104)

## யாழில் மீண்டும்...

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் நேற்று வரை (இன்று) 469 மரணம் பதிவாகியுள்ளது தற்போதைய சூழலில் 634 குடும்பங்கள் கொரோனா தொற்றினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது தற்போது கொரோனா அதிகரித்து செல்கிறது. பொதுமக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்கவேண்டும்.

சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் போன்றவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். தற்போதைய சூழலில் தளர்வு நிலை அறிவிக்கப்பட்டுள்ளபோதும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது. அவை கட்டாயம் பின்பற்றப்படவேண்டும்.

அவ்வாறு செய்வதன்மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோனாவை முற்றுமுழுதாக கட்டுப்படுத்தலாம். முகக்கவசம், இடைவெளி போன்ற விடயங்களில் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். இது மட்டுமன்றி பயணங்கள் இதர செயற்பாடுகளின்போது ஒன்றுகூடுவதை தவிர்க்க வேண்டும்.

எவ்வளவு தூரம் ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டுடன் இருப்போமோ அத்தகைய அளவிற்கு நாமும் எமது சமுதாயத்தை பாதுகாத்து கொள்ளலாம் என்றார்.

(ஞா-18,33,104)

## தொடர் வாந்தி...

சுவாமிப்பிள்ளை அன்ரனி வினோஜன் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த சில தினங்களாக (15, 16) தீவிர வயிற்றுக்குத்து, தொடர் வாந்தி என்பவற்றால் அவதிப்பட்ட குறித்த இளைஞர் தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா)

## தமிழர் தாயகப்...

கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை மாலை தமிழர் தாயகப் பகுதிகளில் அதிகளவான இந்து மக்கள் வீடுகளை சுத்தம் செய்து விளக்குகளை ஏற்றி வழிபாடுகளில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டனர்

கடந்த காலங்களில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பொது மக்கள் கார்த்திகை தீபத்திருநாளில்அதிக ஆர்வம் காட்டாத நிலையில் இவ்வருடம்கொரோனா தொற்று பரவல் சற்று தணிந்தநிலையில் வீடுகளில் சுடர் ஏற்றி வழிபாடுகளில் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை யாழ்.பல்கலைக் கழகத்திலும் மாணவர்களால் கார்த்திகை தீபம் ஏற்றிக் கொண்டாடப்பட்டது. (ஞா-18,33,104)

## மாவீ...

யில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று திருநகர் பகுதியிலும் அதை அண்டிய பகுதிகளிலும் இவ்வாறான செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வந்தனர்.

இதனால் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## கார்த்திகை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் எதிர்வரும் 27ஆம் திகதி நினைவேந்தப்படும் நிலையில் நேற்று முன்தினத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் 07 பொலிஸ் பிரிவுகளினூடாக 47 பேருக்கு எதிராக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நினைவேந்தலுக்கு எதிராக தடையுத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தமிழ் மக்கள் வீடுகளின் முன்பாகவும் தமது தொழில் நிலையங்கள், தோட்ட நிலங்கள் போன்றவற்றில் தீபம் ஏற்றி கார்த்திகை நாளை அனுஷ்டிப்பது போன்றே நேற்று இரவு 6 மணிமுதல் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மக்கள் வாழைக் குற்றிகளை வீட்டின் முன்பாக நாட்டி அதில் சுடர் வைத்து ஏற்றி கார்த்திகை திருநாளை கொண்டாடிய நிலையில் குழப்பமடைந்த இராணுவத்தினர் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் தீபம் ஏற்றிய சில வீடுகளுக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். (ஞா)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2021.11.18
சீட்டிழுப்பு இலக்கம் - 620
Z 27 28 50 72
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2885
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 02 08 24 60

மஹஜன சம்பத
திகதி 2021/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 4590
T 8 9 3 5 6 0

மெகா பவர்
திகதி 18/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0938
B 21 | 18 25 40 47

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1167
வெற்றி இலக்கங்கள்
துலாம் 2 2 6 3 8 0

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1393
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2021.11.18
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,340,240/-
வெற்றி இலக்கங்கள் 18 47 55 60 P

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.11.18
சீட்டிழுப்பு இல: 3728
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,350,320/-
வெற்றி இலக்கங்கள் 04 09 53 64 P

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1567
சீட்டிழுப்பு திகதி 18.11.2021
நிறம் பச்சை
தினம் வியாழன்
Y 05 21 32 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 70,643,153/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,527,763/=
திகதி 18.11.2021
வெற்றி வாரம் 3279
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 01 17 26 48 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7 495,803/=

சுபிரிதி வாசனாவ
திகதி: 2021-11-18
வெற்றி வாரம் : 460 | வர்ணம் : நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 10,813,052/-
Z 28 62 41 1
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,437,960/-
ரூ. 10,882,756/-

# எதிர்வரும் 24,25,26,27 ஆம் திகதிகளில் வடக்கு, கிழக்கில் கடும் மழைக்கு வாய்ப்பு

## புவியியல்துறை பேராசிரியர் பிரதீபராஜா தெரிவிப்பு

எதிர்வரும் 24, 25, 26 மற்றும் 27ஆம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழுவதும் பரவலாக மிகக் கனமான மழை கிடைக்க வாய்ப்புள்ளதாக யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சீரற்ற கால நிலை குறித்து தனது முகப்புத்தகத்தில் இது குறித்த தகவல்களை பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“வங்காள விரிகுடாவில் தோன்றிய தாழமுக்கமானது தீவிர தாழமுக்கமாக மாறி இந்தியாவின் சென்னையிலிருந்து 270கி.மீ. கிழக்காக கடலில் நிலை கொண்டிருக்கின்றது.

நேற்று கரையைக் கடக்கும் என எதிர் பார்க்கப்பட்ட இந்தத் தாழமுக்கம் நகர்வு திசையில் மாற்றத்தைக் கொண்டிருப்பதோடு மிகவும் குறைவான வேகத்தில் நகர்வதால் இன்று இரவு அல்லது நாளை காலை சென்னைக்கும் புதுச்சேரிக்கும் இடையில் மதுராந்தகத்தில் கரையைக் கடக்கும். எனவே வடக்கு மாகாணத்திற்கு கிடைத்துவரும் மழை இன்று வரை தொடர வாய்ப்புள்ளது என்றார். (ஞா)


**கல்வியாண்டு - 2022**
தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் 06 – 11
ஆரம்பம் : 01.12.2021
தமிழ்ப் பாடத்தில் உயர்புள்ளி பெற தனித்துவமான வழிகாட்டல்.
ஆசிரியர் : தமிழ்ச்சுடர் திரு. க.மு. நித்தி
077 105 1015
(C-3049)

**காணி விற்பனைக்கு**
பலாலி றோட், ஊரெழு, மனோன்மணி அம்மன் கோவிலுக்கு 100 மீற்றர் அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு (8671)
077 658 5999
077 505 8561

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)
(8670)

**A/L மீளதெளிவுறல் 21/22/23**
வன்னி/ கிளி./ யாழ். மாவட்டம் வீடு வரல். (இரு மொழிகளிலும்) இரசாயனம் - சிங்கம் மாஸ்டர்
076 056 5786
உயிரியல் - தினக்குரல் வித்யா (8655)
077 665 5290


# பிரபல எழுத்தாளர் கே.எஸ். ஆனந்தன் காலமானார்



(யாழ்ப்பாணம்) ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் கார்த்திகேசு சச்சிதானந்தன் நேற்றுக் காலமானார்.

கே.எஸ். ஆனந்தன் என்ற பெயரில் சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதிவந்த இவர், பத்திரிகைகளிலும் ஆக்கங்களை எழுதி வந்தார்.

“தீக்குள் விரலை வைத்தால்” என்ற இவரின் சிறுகதை மிகப் பிரபலமானது. இணுவிலைச் சேர்ந்த கே.எஸ். ஆனந்தனின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். (ஞா)


**DCM**N - யாழ். நகர்
யா/ வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
கலை, வர்த்தகப் பிரிவு
நேரடி வகுப்புகள் ஆரம்பம் : 20.11.2021
காலை 8.00 மணி
- A/L 2023 புதிய பிரிவு ஆரம்பம்.
- ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
- Day Class துரித மீட்டல்.
அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம்.
நிர்வாகம் 077 011 9434
(C-3045)

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL
(C-2919)

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777
(C-3043)


# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு சச்சிதானந்தன்

### ( K.S. ஆனந்தன் – பிரபல எழுத்தாளர் )

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த “கலாபூஷணம்” கார்த்திகேசு சச்சிதானந்தன் (K.S. ஆனந்தன் - பிரபல எழுத்தாளர்) அவர்கள் நேற்று (18.11.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - செல்லாபரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவி அவர்களின் ஆருயிர்க் கணவரும் வைதேகி, அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும் N.T.S. சுபநாதன் (பிரதேச செயலகம் - நல்லூர்), தயாபரன் (சாரதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்ஜன், ஆரூரன், அபிமன்யு, சகானா, சாகித்தியன், சாவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் நித்தியானந்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற காசிநாதர் (ஓய்வுநிலை தபாலதிபர்), காலஞ்சென்ற கௌசலாதேவி மற்றும் விவேகானந்தன் (வெள்ளை - சுவிஸ்) ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரனும் பரமேஸ்வரி, மனோன்மணி, செல்வராசா (ஓய்வுநிலை உதவிப் பிரதேச செயலாளர்), ரஞ்சிதமலர், காலஞ்சென்ற தங்கராசு மயில்வாகனம், காலஞ்சென்ற நாகலிங்கம் ஆயிலியம் மற்றும் செல்வி பூமணி சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் செந்தில்குமரன் (லண்டன்), காலஞ்சென்ற அன்புக்குமரன் மற்றும் நவநீதகுமரன் (ஆசிரியர்), சுகநீதகுமரன் (சுவிஸ்), நிர்த்திகா ஜெயரூபன், கார்த்திக்குமரன் (லண்டன்), விரதன் (சுவிஸ்), விரவி (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் நிரஞ்சலா (கனடா), துஷ்யந்தி (அவுஸ்திரேலியா), செந்தூர் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.11.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (8669)

1 ஆம் ஒழுங்கை,
சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
070 644 8763
077 844 8763
தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.